முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1016

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.07.2022, திங்கட்கிழமை

1. ஓங்கார ஞானியே அரங்கா வாழ்க
ஓங்கார மகா சக்தியே தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் உமக்கு
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 27 நாள், 11.07.2022 திங்கட்கிழமை)
2. ஆசியதும் அரங்கன் பலம் கூடவும்
அரங்கனுக்குள் என் ஆற்றல்மிகுதியாகி
வரங்களாக மக்களுக்கு திரும்பவும்
வழங்குவேன் சூட்சும சக்தி குறித்த ஆசி
3. ஆசியதும் அரங்கனுக்கு பிரம்ம வேளையில்
அனுதினம் ஆறுமுகன் ஆற்றல்கூட்டி வருகின்றேன்
வாசிவென்ற ஞானியர் படைகளையும்
வரவழைத்து அரங்கன் வாழ் பகுதிக்குள்
4. உள்ளாக மாதவபலம் தன்னை
உயர் சக்தியாக பெருக்கி வருகின்றேன்
வல்லமைபட இந்தவித காலங்கள்
வரங்கள் மிகுதிபடும் காலமாக இருக்க
5. சிந்தை வைத்து அரங்கன் திருவடி பற்றி
சிவதீட்சை உயர் தீட்சை பெறும் மக்களுக்கு
விந்தைபட வினைகள் விலகுவதோடு
விளம்பிடுவேன் இனி பிறவாகதிக்குண்டான
6. ஆனதொரு சக்திபலம் கூடி
அழியாமை எனும் மகா சூட்சுமத்தை
ஞானமாக அடையும் வாய்ப்பும் சிறப்பும்
ஞானதேசிகன் வழி உயரும் நிலையும் கிட்டும்
7. கிட்டவே அரங்கன் வழி தொடருகின்ற ஞானம்
குவலயத்தையே மாற்றும் என்பது உறுதி
உத்தமமாய் அன்பர்கள் ஓங்காரக்குடில் நோக்கி
ஓடிவந்தால் அவர்கட்கெல்லாம் ஞானசித்தி உறுதிஉறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–